This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# ஜேகே

## ஜேகே தன்னைப்பற்றிச் சொல்லிக் கொள்ளும், ஒரு முக்கியமான மனிதரைச் சந்திக்கும், சிலநோட்டுக்கள் கைமாறும் முதல் அத்தியாயம்

ஏதோ ஒரு காலநிலையில் துவங்க வேண்டியிருக்கிறது. எங்கே துவங்கலாம்? துவங்குவது என்ன துவங்குவது? ஆரம்பிப்பது, ஆரம்பிப்பதற்குமுன் இந்த இடத்திலேயே நிறுத்திவிட்டு 'ஜனகணமன' பாடினால் என்ன என்கிற ஆசை பிரதானமாக இருக்கிறது. செய்யலாமா?

எழுந்து

நி
ல்
லு
ங்
க
ள்.

'ஜன கண மன அதி நாயக...'

இருங்கள், உட்காருங்கள் மறுபடி. என்னைப் பற்றி எழுத்தில் சொல்லவேண்டிய கட்டாயமோ, முக்கியத்துவமோ எதுவும் எனக்கு இல்லை. ஆனால் நான் அவ்வளவு சாதாரணனும் அல்ல. எனக்குச் சில நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. அவைகளை, நிகழ்ந்த வரிசையைச் சொல்லுகிறேன். நான் அதைச் சொல்லும் விதத்திலிருந்தே என்னைச் சற்று வேறு பட்ட ஆசாமி என்று நீங்கள் ஊகித்திருக்கலாம். நீங்கள் என்று யாரை வைத்துப் பேசுகிறேன் என்று எனக்கு தெரியவில்லை. நீங்கள் யார்? நீங்கள்... இப்போது இந்த வரியை, இந்த 'யை' 'யை'யன்னாவைப் படிக்கும் நீங்கள் யார்? உங்கள் பெயர் என்ன?

ராமமூர்த்தி?

பெர்னாண்டஸ்?

கலா?

சரஸ்வதி, நளினி, வசந்தி, கிருஷ்ணசாமி, ஸாலமன்ராஜ், ஜெஸ்ஸிலா சையத்?

நீங்கள் ஏன் இந்தப் பத்திரிகையை எடுத்து இந்தப் பக்கத்தைப் படிக்கிறீர்கள்? எந்தச் சூழ்நிலையில் படிக்கிறீர்கள்? உங்கள் சரித்திரம் என்ன? நீங்கள் கவலைப் பட்டது உண்டா? மணலில் நடந்ததுண்டா? என்னைப் போல் கையில் உள்ள மோதிரத்தை விற்று 'டாஸ்டாவ்ஸ்கி'யின் 'காரமஸாவ்' புத்தகத்தை வாங்கிப் படித்திருக்கிறீர்களா? என்னைப் போல் விமானத்தை ஓட்டியிருக்கிறீர்களா?